





## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

**பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்**

மீன்பிடி
இழுவலைபடகு
உரிமையாளர்–
சகாயம்

இந்த இழுவலை படகை ஆழ்கடல் மீன்பிடி படகா மாற்றுவதற்கு அரசு கொஞ்சம் உதவி செஞ்சா நாமலும் பிரச்சனை இல்லாம ஆழ்கடலில் மீன் பிடிக்கலாம்





மீன்வள ஆய்வாளர்

பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலை படகுகளுக்கு பதிலாக ஆழ்கடல் மீன்பிடி படகு கட்ட அரசு மானியம் வழங்குகிறது.



எந்தெந்த
மீனவர்கள் இந்த
திட்டத்தில்
பயன்பெற
முடியும் சார் ??



இதில் பாக் வளைகுடா
மாவட்டங்களில் உள்ள இழுவலை
விசைப்படகு உரிமையாளர்கள் பயன்
பெறலாம்.



ஓர் படகிற்கான
மானிய விவரம்
என்ன சார் ??



ஒரு படகு கட்ட ஆகும்
மொத்த செலவு ரூ.80
இலட்சத்தில்
70% மானியத்
தொகையாக ரூ. 56
இலட்சம் அரசு
தருகிறது சகாயம்



சார் இந்த திட்டத்த
நம்பி இறங்கலாமா?



நம்ப ஜான்சன் இந்த
திட்டத்தால நல்லா பலன்
அடைஞ்சிருக்காரு சகாயம்.
இப்ப மாதத்திற்கு 2.0 முதல்
2.5 லட்சம் வரை
சம்பாதிக்கிறார்.நம்பி
இறங்கலாம்





அப்போ நாளைக்கே
அலுவலகத்துக்கு
வருகிறேன் சார்

## மானியம் பெற தகுதியுடையவர்கள்

- இழுவலைப் விசைப்படகு பதிவுச் சான்றிதழ்,
- மீன்பிடி உரிமம்,
- மீனவர்களின் பயோமெட்ரிக்
- அடையாளஅட்டைகள்/ QR குறியீட்டு ஆதார் அட்டை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும்.

## சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. படகினை மாற்றிடுவதற்கான பயனாளிகள் சேர்க்கைக்கான முடிவு ஆணை
2. அங்கீகரிக்கப்பட்ட ஆழ்கடல் மீன்பிடி படகுகளின் வரைபடம்
3. படகு பதிவு/ மீன்பிடி உரிமம் சான்றிதழ்
4. ஆதார் அட்டை நகல்
5. வங்கி கணக்கு புத்தக நகல்
6. நிதி ஆதாரம் / வங்கி கடன் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம்